# தாய்

கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்
மறை வளர ஒன்றிணைவோம்




2022

தை– ஐப்பசி தாய்–25 சேய்–160




வெளியீடு – கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். தொ.பே (0094) 777 289960 விலை–40/-


Nixon Miralee
EXPORTER BY
Nixon Miraalle
NM
100% Premium Quality
EXPORT & IMPORT COMPANY
Tuticorin - Tamilnadu - India
Nixon Miralee
The World's Favourite
Maldive Fish

# தாய் THAAI
## எமது எண்ணம்

January - October 2022
P.O. Box: 1233, Colombo
Mobile: 077 7289960
e.mail:anandapulle@yahoo.com
anandapulle@hotmail.com
www.colombostjosephvazmandram.lk

இறைவன் வரைந்த ஓவியங்களிலே அழகு ஓவியம் அன்னை மரியாள். எனவேதான் கபிரியேல் தூதர் அவரை "அருள் நிறைந்தவளே வாழ்க!" என வாழ்த்துகின்றார். மனிதர்களில் யாரும் இத்தகைய அருளால் நிரப்பப்பட்டார் இல்லை, என்று கூறினால் அது மிகையாகாது. அன்னை மரியாவை நாம் போற்றி புகழ்வது எவ்வளவோ சிறந்தது. அதனால் தான் நாம் வருடம் முழுவதும் அன்னைக்கு வெவ்வேறு பெயர்களில் விழா எடுக்கின்றோம். அன்னைக்குத் தான் எத்தனை பெயர்கள், அவர் புகழ்பாட எத்தனை பாடல்கள், கவிதைகள், நூல்கள்.

கிறிஸ்துவை அறிய வேண்டுமா? அன்னை மரியாவிடம் செல்லுங்கள் என்கிறார் ஆறாம் பவுல். புனித பொன்வாய் அருளப்பர் இவ்வாறு கூறுகின்றார், "என் உடல் முழுவதும் நாவாக மாறினாலும் அன்னையின் புகழைப் பாடித் தீர்க்க முடியாது. இவ்வாறாக புனிதர்கள் அனைவரும் அன்னை மரியாவில் கொண்ட அனுபவத்தினூடாக அன்னையைப் பற்றி விமர்சித்திருக்கிறார்கள். காரணம் வார்த்தையான இறைவனை தன்னுடைய உதரத்தில் தங்கிட, இயேசுவைப் பற்றி எடுத்துச் சொல்ல, அன்னையை விட சிறந்தவர் யாரும் இருக்க முடியாது. அன்னை மரியாவை தமது வாழ்க்கையில் முன் உதாரணமாக கொண்டு வாழ்ந்தார்கள் புனிதர்கள்.

மரியென்னும் உயிருள்ள நற்கருணைப் பேழையில் தான் கடவுள், தன் மகனை உள்ளடக்கினார். அவனது மாசற்ற இதயம் தான் முதன் முதலில் இயேசுவை தாங்கி நின்ற கதிர்பாத்திரம். இயேசுவின் நிமித்தம் அன்னை அனுபவித்த வியாகுலங்கள் ஏராளம். மக்கள் மீட்படைய தமது மீட்புத் திட்டத்தில் அன்னை பல இடங்களில் காட்சிக் கொடுத்து தோன்றினாள். பக்தி முயற்சிகளை ஏற்படுத்தினார். அதில் ஒன்று தான் செபமாலை பக்தி முயற்சியும், அன்னையின் புகழ் மாலையும். இதுவே சிறந்த பக்தி முயற்சியாக இருக்கிறது. செபமாலை என்பது அன்னை மரியாவோடு சேர்ந்து இயேசுவைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க செய்வதாகும். எனது வாழ்க்கையில் செபமே எப்போதும் வெற்றியை தரும். இறை நம்பிக்கை கொண்ட எவரும் இதை மறுப்பதற்கில்லை. செபமாலை வழி செபிப்பதே சிறந்தது. இதன் பயனாக நாம் அன்னை மரியாவின் தாயன்பை உணர்கின்றோம்.

உள்ளம் அமைதி பெற வேண்டுமா? எண்ணிய நல்ல எண்ணங்கள் வெற்றி பெற வேண்டுமா? சுகம் பெற வேண்டுமா? சமாதானம் கிடைக்க வேண்டுமா? நம்பிக்கையோடு செபமாலை செபியுங்கள். நாங்கள் செபமாலை செபிக்கும்போது அன்னை மரியா அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் மீட்பை பெற்றுத் தருகிறார். ஆகவே நாள்தோறும் செபமாலை செபிப்போம் தேவையான வரங்களை அன்னையின் வழியாக இயேசுவிடம் இருந்து பெற்றுக் கொள்வோம்.

நாம் எதைப் பற்றி தியானிக்கிறோமோ அதுவாகவே மாறுகின்றோம். நம் அன்னையின் ஆன்மீக அழகைத் தியானிக்கத் தியானிக்க அன்னையாக மாறுவோம். நமது ஆன்மாவும் அழகுறுகிறது. ஆகவே செபிப்போம். செபமாலையை தினமும், ஆன்ம அழகைப் பெறுவோம்.

**இறை ஆசீருடன்**

## தாய் ஆசிரியர் குழு

**பிரதம ஆசிரியர்**
அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே
✆ : 0777 289960

**ஆசிரியர்**
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
✆ : 0770 090005

**சஞ்சிகைக் குழுத் தலைவர்**
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ
✆ : 0774 985940 ✉ : enestons@gmail.com

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
திருமதி. சுமதி கோமஸ்
✆ : 0773 672113

**உதவி ஆசிரியர்**
திரு. சி. சந்திரன் ✆ : 0750 733579, 0722 838541

**கணனி வடிவமைப்பு**
திருமதி. S. பற்றிக் பெர்னாண்டோ
✆ : 0771 227773

**சஞ்சிகை ஒழுங்கமைப்பு**
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ

**விநியோகம்**
திரு. பீற்றர் சில்வெஸ்டர்
✆ : 0776 010788 ✉ : sylvester770@gmail.com

**இணையத்தளம்**
www.colombostjosephvazmandram.lk

## இயேசுவுடன் தொடர்ந்து பயணித்த

# அன்னை மரியாள்



அதிதூதரான கபிரியேல் சம்மனசானவர் **“அருள் நிறை பெற்றவளே, வாழ்க! ஆண்டவர் உம்முடனே”** (லூக்கா 1 : 28) என்று மங்கள வாழ்த்தை உரைத்ததுமே, மன மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட அன்னை மரியாள், தான் கன்னியாயிற்றே என்று சலனமடைந்தாலும் கூட தேவனின் சித்தத்தைச் சிரமேற் கொண்டு அப்போதிருந்தே இயேசுவுடன் பயணிக்க தயராகி விட்டாள்.

தேவதூதர் மூலமாக மற்றொரு நற்செய்தியான “முதிர் வயதில் எலிசபெத் அம்மாளும் கருவுற்றிருக்கிறார்.” என்பதை அறிந்தவுடன் தனது உறவு முறையான எலிசபெத்தம்மாளை சந்திக்க இயேசுவுடன் பயணிக்கிறாள். அத்தையும் மைத்துனரும் தன் தாயைச் சந்திக்க வந்திருக்கிறார்கள் என்று உணர்ந்து கொண்ட எலிசபெத்தம்மாளின் கருவறையின் இருந்த சிசு (யோவான்) ஸ்நாபக அருளப்பர் உவகையால் துள்ளிக் குதித்ததாகவும், அக்கணமே அவரது ஜென்ம பாவம் நீங்கியதாகவும் விவிலியத்தின் மூலம் அறிகிறோம். தேவ அன்னையை சந்தித்த எலிசபெத்தம்மாள் தூய ஆவியால் தூண்டப்பட்டு, “பெண்களுள் பேறு பெற்றவள் நீ, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர் பெற்றவரே!” என்று வாழ்த்துகிறார். (லூக்கா 1 : 39 - 45) மக்கள் தொகை மதிப்பெடுக்கும் சமயத்தில், பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊர்களுக்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகவே தாவீதின் வழி மரபினரான ஜோசேப்பும் தனது இல்லாளான மரியாளையும் அழைத்துக் கொண்டு பதிவு செய்ய கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்கு சென்றார். அப்போது இயேசு அவளோடு கூட இருந்தார். பெத்லகேம் ஊரிலேயே அவதரித்தார். (லூக் 2 : 3 - 7) வேறு வேறு திசையிலிருந்து வந்திருந்த மூன்று அரசர்களும் குழந்தை இயேசுவை ஆராதிக்க வந்தார்கள். வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் வைத்திருப்பதைக் கண்டார்கள். நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். (மத்தேயு 2 : 11)

> **“தேவ அன்னையை சந்தித்த எலிசபெத்தம்மாள் தூய ஆவியால் தூண்டப்பட்டு, “பெண்களுள் பேறு பெற்றவள் நீ, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர் பெற்றவரே!” என்று வாழ்த்துகிறார்.”**

ஏரோது மன்னன் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொன்றுவிடும் படி ஆணை பிறப்பித்தவுடனே, தன் மகன் அந்த கொடுமையில் சிக்கி விடக்கூடாதென்று, தொலைவிடங்களுக்குக் கொண்டு சென்று, மறைத்து வைத்து காப்பாற்றினாள் பிறந்த நாற்பதாம் நாள் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து மீட்டுக் கொண்டாள்.

**ஜெயக்குமார் பெர்னாண்டோ**

பாஸ்கா திருவிழாவுக்கு சென்றிருந்த வேளை, பன்னிரெண்டு வயது நிரம்பிய இயேசு தாயுடன் இருக்கிறார் என்று தந்தையும், தந்தையுடன் இருக்கிறார் என தாயும் நினைத்துக் கொண்டு, ஆலயத்திற்கு வெளியே வந்து பார்த்தபோது அவர் தவறிப்போயிருப்பதை அறிந்து கலங்கிப் போனார்கள். கடவுள் அருளிய மாபெரும் பொக்கிஷத்தை தவறிவிட்டுவிட்டோமே என்று அன்னை மனம் பேதலித்திருக்கும், முள்ளிக் கால்வாய் போராட்டத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி கதறி அலறிய நூற்றுக்கணக்காக தாய் மார்களை ஊடகங்கள் ஊடாக கண்டோம்.

சமீக காலமாக கடத்தப்பட்டு, சீரழிக்கப்பட்டு சடலங்களாக மீட்கப்பட்டுக்கொண்டிருக்கும் சிறார்களைப் பற்றி அறிந்துக் கொண்டிருக்கிறோம். அவர்களின் பெற்றோர்கள் படும் வேதனைகளைச் சகிக்க முடியவில்லை. அதே போன்றதொரு வேதனையைத் தான் அன்னை மரியாளும் தலைமகனைத் தவிக்கவிட்டு கதறி அழுதிருப்பாள். அதே மனநிலையைத் தான் அநுபவித்து இருப்பாள். மூன்று நாள்...

தொடர்ச்சி 22ம் பக்கம்



பிற இனத்தாரே! நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்!

# சிறுமந்தையே ஏன் சிறைவாழ்கிறாய்?

வண்ணக் கனவுகளுடன்
நீ வட்டமிடும் பள்ளிப்பருவம்
எண்ண அலைகளை கல்விக்கடலில்
கரைபுரண்டோடிட விட்டு
ஒழுக்கமும் விளையாட்டும்
கலையும் ஆற்றலும்
உடலை இவ்வுலக வாழ்வில் அலங்கரிக்க
அருளால் இறையன்பால் வழியும் ஆன்மா
இறையுறவில் அக்களிக்க
நீ மொட்டு விட்டு மலராகி மணம் வீச
வாழ்க்கை என்னும் அரும்கொடைக்குள்
உன்னை தாலாட்டி, பாராட்டி, சீராட்ட
தாயின் கருவில் நீ உருவாகுமுன்
தன் இதயத்திலும், எண்ணத்திலும்
உன்னைத் தாங்கினார் இறைவன்.

உடலும் ஆன்மாவும் ஒரு சேர
உள்ளம் என்ற சோலைக்குள்
அன்பு உறைய

இறைசாயலாய் நீ வலம்வர
உயிர்மூச்சை உனில் ஊதி
உயர்வாய் வாழ ஆண்டவர்
கனவொன்று கண்டு கவிதை யாத்தார்
உனைப்பற்றி

நீயோ...
உடலுக்காய் குளிக்கிறாய் வாசனைத்
திரவியம் பூசுகிறாய்
தொலைக்காட்சி பார்க்கிறாய்
சினிமா ரசிக்கிறாய்
கையடக்க தொலைபேசி
உள்ளங்கையில் தவமிருக்க
அதில் சாத்தானின் லீலைகளால்
நிரம்பி வழிகிறாய்
நன்றாக தூங்குகிறாய் அறுசுவை
உணவை ருசிக்கிறாய்
விளையாடுகிறாய் நண்பருடன் சுற்றுகிறாய்

கல்வி கற்று முடிக்குமுன்
திருமணம் முடிக்கிறாய்
புத்தகச்சுமையை இறக்குமுன்
பிள்ளையை சுமந்து
வாழ்வை வெறுக்கிறாய்
இப்படித்தான் வாழ வேண்டும்
என்ற வரை முறைமீறி
எப்படியும் வாழலாம் என வாழ புறப்பட்டு
அழிவின் விளிம்பில் தடுமாறுகிறாய்

போதையை பாவித்தால் எல்லாம்
சரியாகிவிடும் என்கிறாய்

நீ இறந்தால் சவம் என்றும்
உடலை எப்போது கொண்டு வருவார்கள்
எங்கே வைப்பார்கள் அடக்கம் எப்போது
அதனோடு உன் உலக வாழ்வுக்கும்
உடலின் மாண்புக்கும்
முற்றுப்புள்ளி வைத்துவிடும் இந்த உலகம்

ஆன்மா என்ற ஒன்று இருப்பதை
நினைத்துக் கூட பார்த்தாயா
உயிர்மூச்சு எனும் ஆண்டவரின் கொடை
வெளியேறிய பின் உனக்கு என்ன மதிப்பு
என கொஞ்சம் சிந்தித்துத்தான் பார்த்தாயா

வரண்டு போன உன் ஆன்மாவுக்கு
திருப்பலியால் அருள் ஊற்றை பாய்ச்சினாயா
இருள் சூழ்ந்த பாவம் படர்ந்த அதற்கு
ஒப்புரவு அருளடையாள துணை நாடினாயா
செபமாலை எனும் ஆயுதத்தால்
உன் தனி, குடும்ப வாழ்வை
அழிக்கும் சாத்தானுக்கு சாட்டையடி
கொடுத்தாயா
ஆண்டவன் கருணை வழியும்
நற்கருணையால்
பசியால் மடியும் ஆன்மாவுக்கு
உணவு தந்தாயா
அருளடையாளங்களை அடிக்கடி பெற்று
வாழ்வுக்கு அருள்வளம் இறைவரம்
சேர்த்தாயா
இறைவார்த்தை வாசித்து
இறை பிறர் உறவில்
வளர்ந்து மலர்ந்து மணம் பரப்பினாயா
அறமும் நற்செயல்களும் தர்மமும் கொண்டு
ஒளியாக உப்பாக பிறர் வாழ்வில்
நுழைந்தாயா

உடலும் ஆன்மாவும் ஒரு சேர உனை
படைத்த இறைவன் உள்ளத்தை
உடலை மட்டும் போசித்து
வரண்ட வாழ்வினால் உடைத்தாயா

இறந்தபின் இரண்டு நாட்களே
உன்னை நினைத்து
பின் மறந்து போகிற உலகத்தை
திருப்திப்படுத்த என்னென்ன செய்கிறாய்
ஆண்டவர் முன்னால் முடிவில்லா
காலத்துக்கும்.

தொடர்ச்சி 19ம் பக்கம்

# தாய் வாசகர்களின் கவனத்திற்கு!

**அன்பார்ந்த தாய் வாசகர்களே!**

நாட்டில் நிலவும் பணவீக்கத்தின் காரணமாக தாய் சஞ்சிகை அச்சிடுவதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. முக்கியமாக அச்சிடல் செலவானது மும்மடங்காக அதிகரித்திருப்பதாலும், தாய் சஞ்சிகையை பணம் கொடுத்து வாங்குவதில் வாசகர்களுக்கு ஏற்படும் சஞ்சலத்தையும் கருத்திற் கொண்டு, இச்சஞ்சிகையை இலத்திரனியல் புத்தகமாக எமது மன்றத்தின் இணையத்தளத்தில்

**www.colombostjosephvazmandram.lk**

பிரசுரிக்க தீர்மானித்துள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம்.

மேலும் விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். எமது மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது விளம்பரங்களை அனுப்பி வைக்கலாம். எமது மின்னஞ்சல் முகவரி

**e.mail:anandapulle@yahoo.com**

**நன்றி**

**தாய் – ஆசிரியர் குழு**

# குருத்துவம் என்ற உன்னத இறை அழைத்தல் பணிக்கென அழைக்கப்பட்ட 11 தியாக்கோன் அருட்சகோதரர்கள், குருக்களாக திருநிலைப்படுத்தும் திருப்பலி



கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் குருத்துவ பணிக்கென அழைக்கப்பெற்ற 11 தியாக்கோண் அருட்சகோதரர்கள், குருக்களாக திருநிலைப்படுத்தும் திருப்பலியானது அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் புரட்டாதி மாதம் 10ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெற்றது.

**இவ்வருட்சகோதரர்கள் பெயர்கள் பின்வருமாறு**

அருட்சகோ. கிரிமாந்த சாமப்பிரிய பர்னாந்து
அருட்சகோ. அஷாந்த நிர்மான பர்னாந்து
அருட்சகோ. சால்ஸ் ரஜீவ வில்லெஸ்
அருட்சகோ. மிலான் பிரியதர்ஷன பர்னாந்து
அருட்சகோ. டிலான் சாலிக்க பெரேரா
அருட்சகோ. T. இசுறு மதுஷான் சுவாரிஸ்
அருட்சகோ. றஜிக்க ஷஷேந்திரா டி சொய்சா
அருட்சகோ. நாமல் நிஷ்ஷாங்க துறம்
அருட்சகோ. ஷேனால் பிராங் பெரேரா
அருட்சகோ. ஓஸ்மன் சுசாந்த றொட்றிக்கோ
அருட்சகோ. துஷாந்த சானக பின்டோ

**இவ் அருட்பணியாளர்களின் பணி வாழ்வு மேலும் சிறக்க தாய் சஞ்சிகை வாசகர்கள் சார்பாக தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் பகிர்ந்து கொள்கின்றது.**



இஸ்ரயேலரே! ஆண்டவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்.

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய "திருவழிபாடு ஓர் அறிமுகம்" என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**

## திருப்பலியின் வரலாறு

### 1.4 ஹிப்போலிட்டஸ் அவர்களின் சான்று

உரோமை நகரில் குருவாக இருந்த ஹிப்போலிட்டஸ் என்பவர் கி.பி 215ஆம் ஆண்டில் "திருத்தூதர்களின் பாரம்பரியம்" (Apostolic Tradition) என்ற நூலை கிரேக்க மொழியில் எழுதினார். இவரும் தம் நூலில் இரண்டு திருப்பலிகளைப் பற்றி அதாவது "ஞாயிறு திருப்பலி" மற்றும் "ஆயரின் திருநிலைப்பாட்டுத் திருப்பலி" பற்றிப் பேசுகிறார். இந்த குறிப்புக்களிலும் கூட காணப்படும் திருப்பலியின் அடிப்படை அமைப்பு முறை, புனித ஜஸ்டின் கூறும் அமைப்பு முறையோடு ஒத்துச்செல்வதாகவே இருக்கின்றது. ஆனால்



புனித ஹிப்போலிட்டஸ் மட்டும் ஒரு புதிய செய்தியைத் தம் நூலில் குறிப்பிடுகின்றார். அதாவது, ஆயர் சொல்லும் நன்றி மன்றாட்டுச் செபம் ஏற்கனவே எழுதப்பட்டதாக இருந்தது என்று கூறுகின்றார். (ஆயர் சொந்தமாகச் செபங்களை சொல்வது சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது என்பதை இது உணர்த்துகின்றது)

மேலும் ஹிப்போலிட்டஸ் இவ்வாறு எழுதி வைத்துள்ள நன்றி மன்றாட்டு (நற்கருணை மன்றாட்டே) சிறிது தழுவி அமைக்கப்பட்டு, இன்று நம் திருப்பலிப் புத்தகத்தில் 2ஆம் நற்கருணை மன்றாட்டாக தரப்பட்டுள்ளது. இந்நிலையே 4ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. மேலும் இக்காலத்தில் திருவழிபாட்டு மொழியாக உரோமையில் கிரேக்க மொழியே பயன்படுத்தப்பட்டது.

### 2. 4ஆம் நூற்றாண்டில்

4ஆம் நூற்றாண்டு முதல் வழிபாட்டில் பல மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. வழிபாட்டு மொழி கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழியாக மாறியது. மேலும் உரோமை வழிபாட்டு முறை எனப்படும் இலத்தீன் வழிபாட்டு முறை தவிர பல புதிய வழிபாட்டு முறைகள் பல்வேறு கிறிஸ்தவ நாடுகளிலும் தோன்ற ஆரம்பித்தன. எடுத்துக்காட்டாக,

- ஆப்பிரிக்க வழிபாட்டு முறை (வடக்கு ஆப்பிரிக்காவில் தோன்றியது)
- மொசராபிக் வழிபாட்டுமுறை (ஸ்பெயின் நாட்டில் தோன்றியது)
- அம்புரோஸியன் வழிபாட்டுமுறை (மிலான் நகரில் தோன்றியது)
- கல்விக்கன் வழிபாட்டு முறை (Gaul எனப்பட்ட பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய பகுதிகளில் தோன்றியது)
- செல்டிக் வழிபாட்டுமுறை (அயர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தோன்றியது)

ஆனால் 8ஆம் நூற்றாண்டு முதல் இலத்தீன் வழிபாட்டு முறை ஐரோப்பிய நாடுகளில் பரவ ஆரம்பித்த போது, மற்ற வழிபாட்டு முறைகள் அங்கு சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தன. மொசராபிக் வழிபாட்டு முறை 10ஆம் நூற்றாண்டில் மறைந்தது. ஆனால் அம்புரோசியன் வழிபாட்டு முறை மட்டும் மாறாமல் இருந்தது. இன்றும் கூட இதுவே மிலான் நகரில் பயன்படுத்தப்படுகிறது.

இது தவிர கீழைத் திருச்சபையிலும் கூட பல்வேறு வழிபாட்டு முறைகள் தோன்றின. எடுத்துக்காட்டாக, கல்தேய வழிபாட்டு முறை, அந்தியோக்கு வழிபாட்டு முறை, சீரியன் வழிபாட்டு முறை, மாரோனைட் வழிபாட்டு முறை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### 3. 4ஆம் நூற்றாண்டில் உரோமையில் நடைபெற்ற திருப்பலி



இக்காலம் உரோமை வழிபாட்டு முறையின் "பொற்காலம்" என்று அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் உரோமையில் இலத்தீன் சடங்கு முறை திருப்பலி எப்படி நடைபெற்றது என்று காண்போம்.

கி.பி 313ஆம் ஆண்டில் கான்ஸ்டன்டைன் பேரரசரால் "மிலான் சாசனம்" வெளியிடப்பட்ட பிறகு, கிறிஸ்தவ மதம் அரசாங்க மதமாக மாறியது. உரோமை நகரில் பல பெரிய கோவில்கள் கட்டப்பட்டன. அது மட்டுமின்றி, உரோமையைச் சுற்றிலும் சிறு சிறு கோவில்கள் கட்டப்பட்டன.

இக்காலத்தில் திருப்பலி திருத்தந்தையின் தலைமையில் கொண்டாடப்பட்டது. மேலும் இக்கால வழிபாடு "நிலையத் திருவழிபாடு" என்று அழைக்கப்பட்டது. அதாவது உரோமை நகரின் ஆயராகிய திருத்தந்தை ஒரே ஒரு கோவிலில் மட்டும் திருப்பலியைக் கொண்டாடவில்லை. ஏனெனில் கொண்டாடப்படும் திருவிழாவிற்கு ஏற்ப அவர் பல்வேறு கோவில்களுக்கும் சென்று திருப்பலி கொண்டாடினார்.

அதாவது, அவர் லாத்தரன் பேராலயத்திலிருந்து பவனியாகப் புறப்பட்டு, வேறொரு கோவிலுக்குச் சென்று திருப்பலி கொண்டாடினார். மற்ற இடங்களைச் சார்ந்த ஆயர்களும், குருக்களும், இறைமக்களும் திருத்தந்தை திருப்பலி கொண்டாடும் கோவிலுக்கு வந்தனர். அது மட்டுமன்றி, உரோமைக்கு வெளியில் இருந்த சிற்றாலயங்களைச் சேர்ந்த மக்களும் கூட திருத்தந்தையின் திருப்பலியில் பங்கேற்றனர்.

ஆனால் இவர்கள் திருத்தந்தையின் திருப்பலியில் பங்கேற்க வர முடியாதபோது, குறிப்பிட்ட ஒரு சடங்கு நிறைவேற்றப்பட்டது...

தொடர்ச்சி 22ம் பக்கம்

# வெள்ளி விழாவை நிறைவுசெய்த கொழும்பு புனித ஜோசேப்வாஸ் மன்றம்.

– பிரான்சில் இருந்து அம்புறோஸ் பீற்றர்.

வரலாற்றை மறந்தவர்களும், வரலாற்றை மறைப்பவர்களும் வரலாற்றை தொலைத்தவர்களும் வரலாற்றில் வாழ்ந்ததாக வரலாறே இல்லை. இலங்கை வரலாற்றில் இலங்கை சுதந்திரம் அடைந்த பிற்பாடு நாட்டில் நடைபெற்ற இனக்கலவரங்களை நாம் எளிதாக கடந்து சென்றுவிட முடியாது. அந்த வகையில் 1983ஆம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்தை எம்மால் என்றும் மறக்க முடியாது.

இந்தக் கலவரத்தின் பின்பே இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உலக நாடுகள் பலவற்றிலும் அகதிகளாக வாழத்தலைப்பட்டனர். வெளிநாடு செல்ல வசதியற்ற வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் தலைநகர் கொழும்பில் வந்து குடியேறினர். அவர்களில் தமிழ் கத்தோலிக்க மக்களும் கணிசமான அளவில் இருந்தனர். கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் உள்ள முப்பதிற்கும் (30) அதிகமான பங்குகளில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் பேசும் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு கொழும்பில் குடியேறி வாழ்ந்த மக்கள் தங்கள் ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்ற பெரும் கஸ்ரங்களை சந்தித்தனர். திருமுழுக்கு, திருமணம், முதல்நன்மை, உறுதிபூசுதல், நோயிற்பூசுதல் போன்ற திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்ள பெரும் சிரமங்களைச் சந்திக்க வேண்டியதாயிற்று. மரணச்சடங்குகளை சகோதர மொழியிலேயே நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. ஓரளவு ஞாயிறு திருப்பலிகள் மட்டும் ஆங்காங்கே நடைபெற்றன. இம்மக்களின் ஆன்மீகக் கடமைகளுக்காக ஒரு சில தமிழ்பேசும் அருட்தந்தையர்கள் உதவிகள் புரிந்தபோதும் அவை திருப்திகரமாக இருக்கவில்லை.

இந்நிலையை நன்கு புரிந்துகொண்ட அருட்தந்தை ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே அடிகளார் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அடங்கலாக, ஒரு மன்றத்தை உருவாக்க எண்ணம் கொண்டு, இதற்கான ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வந்தார். கூட்டங்கள் அப்போது லொக்கெட் புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெற்றன. அப்போது அங்கு ஆலயப் பங்குத்தந்தையாக அருட்தந்தை அகஸ்டின் பெர்னாண்டோ அடிகள இருந்தார். அவரது பங்குப் பணிமனையில் தான் கூட்டங்கள் நடைபெற்றன. அப்பொழுதெல்லாம் இப்போது இருப்பதுபோல் நிர்வாகக் கட்டமைப்பு இருக்கவில்லை. கூட்டத்தில் இடம்பெறும் கலந்துரையாடல்களை அவ்வப்போது குறிப்பெடுத்து நான் அடுத்த கூட்டத்தில் சமர்ப்பித்து வந்தேன்.

இவ்வாறு ஒரு சில வருடங்கள் அருட்தந்தை ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே அடிகளாரின் முன்னிலையில் ஏனைய தந்தையர்களின் ஆலோசனையுடன் கூடி ஆன்மீகக் காரியங்களுக்கான சில முடிவுகளை எடுத்து அவற்றை செயற்படுத்தி வந்தோம். இக்காலகட்டத்தில் இலங்கை நாட்டிற்கான ஒரு புனிதரைத் தேடும் பணிகளும் முன்னெடுப்புக்களும், தேடல்களும் இறைமக்கள் வேண்டுதல்களும் நாடு பூராகவும் கத்தோலிக்க திருச்சபையில் முன்னெடுக்கப்பட்டுவந்தன. இதன் காரணமாக இக்குழு ஜோசேவ்வாஸ் மன்றம் என இது உருவெடுத்தது.

ஆரம்பத்தில் ஒரு சில பங்குகளில் இருந்து பொதுநிலையினர் பலரும் மன்றத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர். அதன் பின்னர் நான்கு பங்குகளின் சுற்றுவட்டாரத்தை உள்ளக்கியதாக நடைபெற்ற பகிரங்க பொதுச் சிலுவைப்பாதையின் நிமித்தம் அனைத்துப் பங்குகளிலிருந்தும் பலரும் மன்றத்தில் இணைந்து அங்கத்தவர்களாக செயல்பட முற்பட்டனர். பொதுச் சிலுவைப் பாதையுடன் டிவைன் தியானங்களும் தாய் சஞ்சிகையின் தோற்றமும் இணைந்து கொழும்பு மறைமாவட்டத்தில் ஜோசப்வாஸ் மன்றம் பெருவளர்ச்சியை அடையத் தொடங்கியது. நிர்வாகக் கட்டமைப்பும் மன்றத்திற்கான யாப்பும் உருவாகியது. ஒவ்வொரு போயா தினத்திலும் மாதாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறத் தொடங்கியது.

கொழும்பு வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வலுசேர்க்கும் வகையில் தாயின் உள்ளடக்கம், பொருளடக்கம், வடிவமைப்பு (தோற்றம்) என்பன கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், சிறுவர், மாணவர், இளைஞர், குடும்பம், சமூகம் போன்ற எல்லாத்தரப்பினரையும் கவரக்கூடிய சஞ்சிகையாக தாய் வலம் வரத்தொடங்கியது மன்றத்தின் கொள்கைகள் செயற்திட்டங்கள், செய்திகள் யாவும் உடனுக்குடன் மக்களை சென்றடையும் வகையில் தாய் சஞ்சிகையின்

குழுவினரும் மன்ற உறுப்பினர்களும் செயல்பட்டனர். மன்றம் கட்டமைப்புக்குள் இயங்கிய ஆன்மீகக் குழு கல்விக்குழு, குடும்பநலக்குழு, விளையாட்டுக்குழு, கலைகலாச்சார குழு, திருயாத்திரை சுற்றுலா ஆவணக்குழு, எல்லா குழுக்களும் தாயின் வளர்ச்சியில் பங்கெடுத்தன.

அத்துடன் பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும், மறையாசிரியர்களும், பொதுநிலையினரும், பல எழுத்தாளர்களும், மாணவர்களும் தமது ஆக்கங்களை அவ்வப்போது வழங்கி தாயின் வளர்ச்சிக்கு உதவிகள் புரிந்தனர். இவ்வாறு தாயின் ஆசிரியராக நான் பணியாற்றிய 10 வருட நினைவுகளும் இப்பொழுதும் என் நெஞ்சில் நிழலாடுகின்றன.

ஜோசப்வாஸ் மன்றமானது ஆன்மீக சமூகப் பணிகள் பலவற்றை செய்தபோதும் அதன் ஆன்மீகப் பணிகள் அனைத்தும் மக்களாலும் போற்றப்படக் கூடியதாகவும் மறக்க முடியாதவையாகவும் இருக்கின்றன. கடந்த 25 வருடங்களாக மன்றத்தினால் ஒழுங்கு செய்து நடத்தப்படும் பகிரங்க பொதுச்சிலுவைப்பாதை இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இதன் மூலம் எல்லா பங்கு மக்களின் தவக்கால மனமாற்றத்தின் ஓர் படிக்கல்லாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

## பகிரங்க பொது சிலுவைப்பாதை

1996ஆம் ஆண்டில் இருந்தே இச்சிலுவைப் பாதை நடைபெற்று வருகின்றது. தூய வியாகுலமாதா ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி கொட்டாஞ்சேனை தூய லூசியாள் பேராலய முன்றலில் திருப்பலியுடன் இந்தப் பக்தி முயற்சி நிறைவடையும் ஆரம்பத்தில் நான்கு பங்குகளான தூய வியாகுல அன்னை பங்கு, தூய அன்னம்மாள் பங்கு, புதுக்கடை தூய செபஸ்தியார் பங்கு, கொட்டாஞ்சேனை தூய லூசியாள் பங்கு மக்கள் கலந்து கொண்ட இச்சிலுவைப் பாதை நாளடைவில் கொழும்பு மறைமாவட்டத்தில் எல்லாப் பங்குகளில் வாழும் எல்லாத் தமிழ் மக்களும் பங்குகொள்ளும் பகிரங்க சிலுவைப் பாதையாக வளர்ச்சி கண்டதுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் இதில் பங்குபற்றி சிறப்பித்து வரும் நிகழ்ச்சியாக வளர்ச்சி கண்டுள்ளது, இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இச்சிலுவைப்பாதை ஆயர் தலைமையில் நடைபெறும் கூட்டுத் திருப்பலியுடன் நிறைவடைவது மற்றுமொரு சிறப்பம்சமாகும். இவ்வாறு



இந்த சிலுவைப்பாதை பக்தி முயற்சியானது மாபெரும் வளர்ச்சி கண்டிருந்த சூழ்நிலையில் இதற்கு எதிர்ப்பும் தோன்றியருந்தது. இதன் காரணமாக நான்கு பங்குகளின் பங்குத்தந்தையர்களும் ஆயர் தலைமையில் கூடி ஆராய்ந்து கலந்துரையாடி ஈற்றில் மக்களின் ஆன்மீக நலன்கருதி தொடர்ந்து இச்சிலுவைப் பாதை நிகழ்சியை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

## டிவைன் தியானம்

ஜோசப்வாஸ் மன்றத்தின் பிரதான ஆன்மீகப் பணிகளில் ஒன்றுதான் டிவைன் தியானம். மன்றத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்ச்சியாக இத்தியான நிகழ்வானது நடைபெற்று வந்தது. ஆரம்பத்தில் இந்தியாவின் டிவைன் தியான இல்லத்திலிருந்து அருட்தந்தையரும் ஒருசில பொதுநிலையினரும் வருகை தந்து தியான உரைகளையும் திருப்பலி நற்கருணை ஆராதனை, நோயாளருக்கான வழிபாடுகள் போன்றவற்றை நடத்திவந்தனர். தியானங்கள் ஆலயங்களிலும் தியான இல்லங்களிலும் நடைபெற்றன. வெளி மறைமாவட்டங்களிலும் அழைப்பின் பேரில் இத்தியானங்கள் நடைபெற்றன. இதனால் ஜோசப்வாஸ் மன்றத்தின் பெயர் பொதுச்சிலுவைப்பாதையை போன்றே



அகில இலங்கை ரீதியில் பரவலாயிற்று, நாளடைவில் தியான உரைகளை எமது நாட்டின் குருக்கள் துறவியர் பொதுநிலையினர் போன்றவர்களும் வழங்கலாயினர். எல்லாவற்றையும் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து நடத்துவதில் மன்றத்தின் இயக்குனர் தந்தை பெரும் பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நிர்வாகக் கட்டமைப்பு

1997இல் இருந்தே எதுவித நிர்வாகக் கட்டமைப்பு எதுவுமின்றி இயக்குனர் தந்தையின் தலைமையில் கூடி எல்லா செயல்பாடுகளையும் சிறப்புற நடைமுறைப்படுத்தி வந்த தூய ஜோசப்வாஸ் மன்றத்திற்கு முதல் முதலாக நிர்வாகக்கட்டமைப்பு 2001 ஆண்டில் உருவாக்கப்பட்டது. மன்றத்தின் முதலாவது தலைவராக றொபட் பெர்னாண்டோ அவர்களும் செயலாளராக அம்புறோஸ் பீற்றர் அவர்களும், பொருளாளராக எமிலியான்ஸ் பெர்னாண்டோ அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். உபதலைவர், உப செயலாளர், உப பொருளாளர் உட்பட செயற்குழு உறுப்பினரும் அடங்கிய முதலாவது நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அது இரண்டு வருடத்திற்கு ஒருமுறை புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு மன்றம் இயங்கி வருகின்றது. இதனால் தலைமைத்துவ பண்பு வளர்க்கப்படுவதுடன் மன்ற

உறுப்பினர் அனைவருமே தலைவர்களாக செயல்படும் நிலை உருவாகின்றது.

## புலமைபரிசில் வழங்குதல்

எட்டாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வருடம் தோறும் போட்டிப் பரீட்சை ஒன்று மன்றத்தின் கல்விக் குழுவால் நடத்தப்படுகின்றது. இதில் கொழும்பு மறைமாவட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் கலந்து கொள்கின்றார்கள். மதிப்பெண்களின் அடிப்டையில் முன்னுரிமை பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 9ஆம் ஆண்டில் இருந்து 12ஆம் ஆண்டுவரை மாதந்தோறும் ஒரு சிறு தொகைப்பணம் வழங்கப்படுகின்றது. அத்துடன் க.பொ.த சாதாரணம் பயிலும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு உதவியாக விசேட கருத்தரங்கும் மன்றத்தினால் ஒழுங்கு செய்து நடத்தப்படுகின்றது.



## அருட்பணி. மத்தேயு விருது.

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பல பங்குகளின் பங்குத்தந்தையாகவும் நீண்ட காலம் மரியாயின் சேனை அங்கத்தவர்களின் ஆன்மீக இயக்குனராகவும் பணியாற்றிய காலம் சென்ற அருட்பணி. மத்தேயு அடிகளின் ஞாபகமாக அருட்பணி. மத்தேயு விருது வழங்கும் திட்டமானது மன்றத்தின் கல்விக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றது. மன்றத்தினால் புலமைப்பரிசில் திட்டத்திற்காக எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கிடையிலுள்ள போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கும் க.பொ. தா சாதாரண உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் இவ்விருது வழங்கப்படுகின்றது. மன்றத்தின் கலைவிழாவில் வைத்து இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## கலைவிழாவும் மன்றமும்

மனித வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே மனிதன் ஒரு குடும்பமாக, குழுவாக, சமூகமாக வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே அவன் தனது கலை, கலாச்சாரம், பண்பாடு சரித்திரம் எதையும் அழிய விடாமல் அடுத்த தலைமுறைக்கு கடத்தி வந்திருக்கின்றான். அவற்றை அழியவிடாது பாதுகாப்பதில் பெரும் சிரமங்களைச் சந்தித்தாலும், அவற்றை பாதுகாப்பதில் பெரும் பங்காற்றி வந்துள்ளான். தான் எங்கு சென்றாலும் செல்லுமிடமெல்லாம் அவற்றைப் பரப்பி வாழந்துள்ளான். அந்த வகையில் அவன் தனது கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாத்து அவற்றை அடுத்த தலைமுறைக்கு கையளிக்கின்றான். நாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழலுக்கு முகம் கொடுத்து வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தலைநகர் கொழும்பில் தங்கி தங்கள் புதிய வாழ்வை தொடங்கிய காலத்தில் மறை வளர ஒன்றிணைவோம் என்ற கொள்கையோடு தொடங்கப்பட்ட தூய ஜோசவ்வாஸ் மன்றத்தின் இயக்குனரும் அதன் உறுப்பினரும் கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை வளர்க்கவும் பாதுகாக்கவும் விரும்பி வருடந்தோறும் ஜோசேப்வாஸ் மன்றத்தின் ஏற்பாட்டின் பேரில் கலைவிழாவை உருவாக்கி நடைமுறைப்படுத்தினர். மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பாடற்போட்டி, நடனப்போட்டி, பேச்சுப் போட்டி, விவாதப் போட்டி போன்ற பலகலைத்துவம் சார்ந்த போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றவர்களை பாராட்டி, கௌரவித்து பரிசு வழங்கி வந்தனர். இதனால் எமது பாரம்பரிய கலை வடிவங்கள் வளரவும் பாதுகாக்கப்படவும் வழிபிறந்தது. இதனால் மன்றத்தின் நற்பெயர் மென்மேலும் பரவியது.

> **“கலைவிழாவை உருவாக்கி நடைமுறைப்படுத்தினர். மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பாடற்போட்டி, நடனப்போட்டி, பேச்சுப் போட்டி, விவாதப் போட்டி போன்ற பலகலைத்துவம் சார்ந்த போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றவர்களை பாராட்டி, கௌரவித்து பரிசு வழங்கி வந்தனர்.”**

அதுமட்டுமன்றி கலை விழாவில் சிறப்பம்சமாக விளங்குவது விருது வழங்குவதும் கௌரவிப்புகளுமாகும். ஆரம்பத்தில் “மறை வளர்க்கும் பணிவிருது” வழங்கப்பட்டது. அந்த வகையில் கொழும்பு மறைமாவட்டத்தில் பங்குகளிலும் பாடசாலைகளிலும், மறைக்கல்வியிலும் மறைப்பணியாற்றியவர்களின் வயது பணிக்காலம் என்பது கருத்தில் கொள்ளப்பட்டு அவர்களுக்கு “மறை மன்ற உறுப்பினர் மத்தியில் அவர்களின் சேவை பங்களிப்பு அனுபங்கள் போன்றவை மதிப்பிடப்பட்டு மன்றத்தின் உயர் விருதான “சேவைச்சுடர்” விருதும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்று வருகின்றது.

இறுதியாக, நான் இக்கட்டுரையில் மன்றத்தின் ஆன்மீக கலைப் பணிகள் பற்றி எழுதியுள்ளேன். இன்னும் மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள், குடும்பச் சேவைகள், அங்கத்தவர் மேம்பாட்டு நிகழ்ச்சிகள், தலைமைத்துவப் பயிற்சிகள் போன்றவையும் நடைபெற்று வருகின்றன. அருட்தந்தை ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே அடிகளின் எண்ணக் கருவில் உருவாகி கால் நூற்றாண்டை நிறைவுசெய்து நிற்கும் கொழும்பு புனித ஜோசேவ்வாஸ் மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர் என்ற பெருமிதத்துடன் தூய ஜோசேவ்வாஸ் மன்றம் பல்லாண்டு பல்லாண்டு பல நூறாண்டு காலம் நிலைத்து நிற்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சேவைச்சுடர், அம்புறோர் பீற்றர்**
**முன்னாள் “தாய்” ஆசிரியர்.**


ஆண்டவரே! நான் தக்க காலத்தில் உம்மை நோக்கி விண்ணப்பம் செய்கின்றேன்

## VEXILLUM LEGIONIS - சேனை அணிவகுப்புக் கொடி




# உதயமான அன்னம்மாளின் திருமகளாகிய மரியாள் கியூரியா

மரியாயின் சேனையானது 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டை நிறைவு செய்வதையிட்டு மரியன்னையோடு இணைந்து மரியாயின் சேனை அங்கத்தினர்களாகிய நாங்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். உலகளாவிய ரீதியில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு பின் 1936ஆம் ஆண்டு இலங்கையில் யாழ் குடா நாட்டில் உள்ள பாண்டியன் தாழ்வு என்ற சிற்றூரில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் அப்போது பங்குத்தந்தையாக இருந்த அமரர். J.A. இராஜநாயகம் அடிகளார் மூலம் அதே பங்கில் முதல் பிரசீடியத்தை ஆரம்பித்து வைத்தார் என்று கூறப்படுகின்றது. அதன் பின் பல மாகாணங்களிலும் பிரசீடியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பில் தமிழ் மேல் சபையாக பரிகார மாதா கியூரியா ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக 1969ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி எமது அற்புத மாதா கியூரியா ஆரம்பிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் 5 வளர்ந்தோர் பிரசீடியங்களும் 3 சிறுவர் பிரசீடியங்களும் இயங்கி வந்ததாக பதிவுகள் கூறுகின்றன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கியூரியா தொடக்க காலத்தில் இலங்கை செனாதூஸ்சுடன் தொடர்புற்று சிறப்பாக இயங்கி வந்தன. ஆனால் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டு பிரச்சினைகளின் காரணமாக செனாதூஸ்சுடனான தொடர்பு



**அற்புத மாதா கியூரியா**
**அங்கத்தவர்கள், நீர்கொழும்பு**

அற்றுபோயின. அக்காலத்தில் அதாவது 2005ஆம் ஆண்டுவரை கிட்டத்தட்ட 22 வருடங்கள் வாய்மொழி வந்த விடயங்களாகவும் எழுதப்படாத பதிவுகளாகவும் உள்ளன. அக்கால கட்டங்களில் கடற்கரை தெரு குருமனையில் கியூரியா கூட்டங்கள் நடைபெற்றதாகவும் கூறப்படுகின்றன. அதன் பின் அக்காலத்தில் கியூரியாவை நடாத்திய மறைந்த வெரோணிக்க ஆசிரியையும் மறைந்த பப்லிஸ் மாஸ்டரும் பழைய செயலாளர் யொஹானாவும் ஊக்கத்துடன் பணியாற்றி எமது கியூரியாவை கொழும்பில் இயங்கி வந்த பரிகார மாதா கியூரியா

> **மரியாயின் சேனையானது 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டை நிறைவு செய்வதையிட்டு மரியன்னையோடு இணைந்து மரியாயின் சேனை அங்கத்தினர்களாகிய நாங்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.**

மேற்பார்வையின் கீழ் கொண்டுவந்து 2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி அக்கியூரியாவுடன் நேரடியாக இணைந்தார்கள். அக்காலங்களில் இருந்த கொழும்பு மேற்சபை தொடர்பாளர்களாக சகோதரர் இராயர், சகோதரர் மரிய சேவியர், சகோதரர் இசைண்ட் அவர்களின் ஊக்குவிப்பினால் சேனை வளர்ச்சியடைந்தது. அதன் பின் கியூரியாவின் தலைமையில் இருந்தவர்கள் மிகவும் முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றார்கள். ஆன்ம குருக்களாக அருட்பணி. மெர்கிவியார், அருட்பணி. உதயதாஸ்...

தொடர்ச்சி 19ம் பக்கம்

# கொழும்பு செக்கடித்தெரு பங்கு அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா – 2022



செக்கடித்தெரு புனித வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 02ஆம் திகதி அன்னையின் கொடியேற்ற திருப்பலியுடன் ஆரம்பமாகி, 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலியோடு நிறைவுபெற்றது. அன்றைய சில நிகழ்வுகளை படத்தில் காணலாம். திருச்சுரூப பவனியில் இன, மத, பேதமின்றி அன்னையின் ஆசீர்பெற பெருந்திரளான மக்கள் பவனியில் கலந்துகொண்டனர்.





# புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா 25.09.2022 அன்று நடைபெற்றது. திருவிழா நிகழ்வுகளை படத்தில் காணலாம்.



# குடும்ப செபமாலை இயக்கம்




**"மாதா இருக்கிறார்கள். அவர்கள் நீ நினைக்கும் அளவுக்கு உனக்கு நல்லது செய்வார். அது உனது நம்பிக்கையைப் பொறுத்தது"**

அக்டோபர் மாதத்தைத் தனிச்சிறப்பாக செபமாலை மாதம் எனச் சிறப்பிக்கிறோம். இம்மாதத்தில் கோவில்களிலும், குடும்பங்களிலும், பிற கூட்டங்களிலும் சிறப்பாக செபமாலை செபிக்கிறோம். இந்த நிலையில், இரண்டு அம்சங்களை இங்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

கத்தோலிக்கத் திருச்சபையில் தற்போது 65 வயதுக்கு மேற்பட வாழ்பவர்களுக்கு அருள்தந்தை பேட்ரிக் பேய்டன் (CSC) என்ற பெயர் நினைவிற்கு வரலாம்.

"சேர்ந்து செபிக்கும் குடும்பம் கூடி வாழும்" என்றும், "சேர்ந்து செபிக்கும் குடும்பம் ஒன்றாக நிற்கும்" என்றும் பறைசாற்றப்படும் அறிவிப்புக்கு இவர்தான் மூலகாரணம். "ஒன்றாகச் செபிக்கும் குடும்பம் ஓர் அமைதியுள்ள உலகம்" என்றும் இவரால் சொல்லப்படுவதுண்டு.

இந்த அருள்தந்தை 1909ஆம் ஆண்டு அயர்லாந்து நாட்டில் மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தார். தனது மூத்த சகோதரர்களுடனும், சகோதரிகளுடனும் செபமாலையை தனது பெற்றோர்கள் வழிநடத்திச் செபித்ததை தனது சுயசரிதையில் நினைவுகூர்கிறார். "புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாகிய எங்களுக்காக இப்போதும், எங்கள் மரண வேளையிலும் வேண்டிக்கொள்ளுங்கள்" என தனது தாய் மாதாவை நோக்கிப் பேசுவது போல செபித்தது தன்னை மிகவும் கவர்ந்ததாகக் கூறுகிறார்.

தனது சகோதரர்களுடன் 1928 ஆம் ஆண்டு (19வது வயதில்) அமெரிக்காவுக்குக் குடிபுகுந்தார். தனது சகோதரர் நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து குருமடத்திற்கு வந்ததையும், தான் பேராலயத்தில் பணியாளனாக இருந்து பின் குருமடத்திற்குச் சென்றதையும் அழகாக தனது சுயசரிதையில் (Mary's Priest) தெரிவிக்கிறார்.

குருமடத்தில் சேர்ந்த இரண்டாவது ஆண்டில் இருதயத்தில் சீர்கேடு ஏற்பட்டது. "நமது சிகிச்சைகள் உபயோகமில்லை. செபம் செய்" என மருத்துவர்கள் கூறிவிட்டனர். எல்லாம் முடிந்துவிட்டது போன்ற நிலையில் இருந்தபோது, இவரது முன்னாள் ஆசிரியர் இவரைப் பார்க்க வந்தார். "மாதா இருக்கிறார்கள். அவர்கள் நீ நினைக்கும் அளவுக்கு உனக்கு நல்லது செய்வார். அது உனது நம்பிக்கையைப் பொறுத்தது" என்று கூறினார். இவர் செபித்தார். மறு வாழ்க்கை, புதிய வாழ்க்கை பெற்றதாகக் கூறுகிறார். "அன்னையே, உம்மை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்றார்.

15-06-1941இல் குருவானார். மாதாவுக்கும், திருச்சபைக்கும் பதில் உபகாரம் செய்ய வேண்டுமே! சிந்தித்த வேளையில் "குடும்பச் செபமாலை இயக்கம்" நினைவுக்கு வந்தது. "ஆண்டவராலன்றி என்னால் எதுவும் செய்ய முடியாது" என்று கூறி இயக்கத்திற்காக பல முயற்சிகள் செய்தார்.




1945, மே 13 ஆம் தேதி (பாத்திமா அன்னை நாளில்) வானொலியில் (Mgtgal Broadcastig System) செபமாலை சொல்லி மறையுரையாற்ற வாய்ப்புக் கிடைத்தது. பிரபல நடிகர், நடிகைகள் முன்னிலையில், நகரில் உள்ள...

தொடர்ச்சி 19ம் பக்கம்



ஆண்டவரே, உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்?

## உரோமையர் 2ஆம் அதிகாரம்

# “நடுநிலைத்தவறாத கடவுளின் தீர்ப்பு“

இறைவனின் வார்த்தையை அறிந்து அதனை உணர்ந்து பின்பற்றி வாழ்பவர்கள் அடுத்திருப்பவர்களின் குறைகளை பெரிது படுத்தமாட்டார்களே. நாம் அனைத்தையும் அறிந்திருக்கின்றோம் என்பதற்காக நாம் சொல்வது செய்வது எல்லாம் சரி என்று நினைப்பதும் மற்றவர்கள் நமது கருத்துகளுக்கு மாறாக. செய்வது எல்லாம் தவறு என்றும் நாம் தீர்ப்பிக்கூடாது. அதற்கான அதிகாரத்தையும் இறைவன் அளிக்கவில்லை.

அனைவரும் மீட்புப்பெற வேண்டுமென்பதே இறைவனின் திருவுளம். நாம் அனைவருமே இறைவனது நற்செய்தி பணியாளர்கள். மனஉறுதியோடு நற்செயல் புரிந்து, மாட்சி, மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடுபவர்களுக்கே இறைவன் நிறைவாழ்வை வழங்குவார். மாறாக தன்னலம் நாடுவோர், உண்மைக்கு பணியாமல் அநீதிக்கு பணிபவர்கள் மீது இறைவனின் இறைவனின் சினமும் சீற்றமும் வந்துவிழும்(7/8)

நம்மில் பலர் இருளில் இருப்போருக்கு ஒளியாகவும், அறிவிலிகளுக்கு அறிவூட்டுகிறவர்களாயும் குழந்தைகளுக்கு ஆசிரியராகவும் இருக்க முனைகிறோமே அன்றி நம்மை நாமே அன்றாடம் ஆராய்ந்து திருத்திக்கொள்ளாது இருக்கிறோம். நாம் திருச்சட்டத்தை அறிந்தவர்களாக மாத்திரம் வாழாமல் தூய ஆவியினால் செயல்படுகிறவர்களாய் வாழ்ந்தோமாயின் மனிதர்களிடமிருந்து அல்லாது எல்லாம் வல்ல இறைவனிடமிருந்தே பாராட்டினை பெறுவோம்.

**தொடரும்.**



**– திருமதி. கோமஸ் –**

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## போருக்கு எதிரான ஒரே ஆயுதம் மன்னிப்பு

**– திருத்தந்தை பிரான்சிஸ்**

### துன்பமும் வலியும் மறைபொருளே

**துன்பமும் வலியும் புரிந்துகொள்ள முடியாத மறைபொருளே எனினும் இத்துன்பங்களின் மூலம் இருளைக் கடந்துவிட்டோம் என்று எண்ணிவிட முடியாது. ஏனெனில் இயேசுவும் இத்தகைய துன்பத்தை தனியாகக் கடந்து வந்தார் என்று எடுத்துரைத்த திருத்தந்தை, எல்லாம் நம்மை விட்டுச்சென்றதாக உணரப்பட்ட துன்ப வேளையிலும் கடவுள்மேல் அதிக நம்பிக்கை வைக்க இயேசு நமக்கு கற்றுக்கொடுக்கின்றார் என்று கூறியுள்ளார்.**

**மன்னிப்பின் வழியாக அமைதிக் கலாச்சாரத்தை உருவாக்குங்கள்**

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கானது

## கத்தோலிக்க திருமறை புதிய பாடத்திட்டம்

### மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

01. திருவிவிலியத்தின் கிரேக்க மொழி பெயர்ப்பு எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
   1. தனக் 2. செப்து வாயித்
   3. ப்றோபேரஸ் 4. பிறவ்படோஸ்

02. இஸ்ராயல் மக்களின் பாலைவனப்பயணத்தின் போது மோசேயால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு விபரம் கூறப்பட்ட நூல்.
   1. எண்ணிக்கை நூல் 2. இணைச்சட்டம்
   3. தொடக்க நூல் 4. தூய லூக்கா

03. ஏலோகிம் பாரம்பரிய மரவுக்குரிய சம்பவம்.
   1. படைப்பு பற்றிய இரண்டாம் கதை
   2. ஆதாம் ஏவாள் கதை
   3. காயின் ஆபேல் கதை
   4. ஈசாக்கை பலியிடல்

4. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினருள் உள்ளடங்காதது.
   1. நாத்தான், அறியா 2. குல்தா, எலிசா
   3. ஆமோஸ், ஆகாய் 4. எலியா, மீக்காயா

5. யூத விவியத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கை.
   1. 39 2. 73 3. 27 4. 46

6. இறைவனின் அழைப்பிற்கு "இதோ நான் இருக்கின்றேன்" என பதிலளித்த இறைவாக்கினர்.
   1. ஏரேமியா 2. எசாயா
   3. எசேக்கியேல் 4. தானியேல்

7. ஏரேமியா என்ற பெயரின் அர்த்தம்.
   1. இறைவன் உயர்த்தியுள்ளார்
   2. இறைவன் பலப்படுத்துகிறார்
   3. யாவே மீட்பாராயிருக்கிறார்
   4. இறைவன் மேலானவர்

8. மத்தேயு நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு பெயர்.
   1. புதுமைகளின் நற்செய்தி
   2. செபத்தின் நற்செய்தி
   3. இறையாட்சியின் நற்செய்தி
   4. புறவினத்தார் நற்செய்தி

9. தூய மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட இடம்.
   1. எருசலேம் 2. அகாயா
   3. உரோமை நகர் 4. பாலஸ்தீனா

10. நற்செய்தியாளர்கள் நால்வரும் குறிப்பிடும் ஒரே ஒரு அருங்குறி.
   1. அப்பங்களை பலுகச் செய்தமை
   2. இலாசரை உயிர்ப்பித்தமை
   3. முடக்குவாத முற்றவரை குணமாக்கியமை
   4. கை சூம்பியவரை குணமாக்கியமை

11. நற்செய்தியாளர் அடையாளம்
   1. மத்தேயு A. எருது
   2. மாற்கு B. கழுகு
   3. லூக்கா C. சிங்கம்
   4. யோவான் D. மனித முகம்

   நான்கு நாற்செய்தியாளர்களினதும் அடையாளங்களின் சரியான ஒழுங்கு முறை.
   1. CBDA 2. DCAB
   3. ACDB 4. ABDC

12. எல்லாப் படைப்புக்களையும் விட மனிதன் மேன்மையானவன் என்பதை உணர்த்துவது.
   1. புத்தி 2. அழகு
   3. உயிர் 4. கல்வி

13. சபாத் என்ற செல்லின் பொருளாய் அமைவது.
   1. மீட்பின் நாள் 2. ஓய்வு நாள்
   3. படைப்பின் நாள் 4.பெந்தக் கோஸ்துநாள்

14. பத்து பெரும் துன்பங்களில் 4 வது துன்பம்.
   1. கல்மழை 2. ஈக்களின் பெருக்கம்
   3. தவளைகளின் பெருக்கம் 4. காரிருள்

15. மோசேயின் பிறப்பு இடம் பெற்ற காலத்தில் தாதியராக செயற்பட்ட இருவர்.
   1. சிப்ரா, தெபோரா 2. அன்னா, பூவா
   3. சிப்ரா, பூவா 4. செபுலா, சிப்ரா

16. இறைவன் எரியும் முட்செடி நடுவே யாருக்கு காட்சி கொடுத்தார்.
   1. யோசுவாவுக்கு 2. யோசேப்பிற்கு
   3. ஆரோனுக்கு 4. மோசேக்கு

17. இஸ்ராயல் மக்கள் எகிப்தில் பாரவோனுக்காக கட்டிய நகரங்கள்.
   1. பித்தோம், கொமோரா 2.சொதோம், கொமோரா
   3. பித்தோம், கிராம்சேசு 4. சிக்கேம், கிராம்சேசு

18. இறைவன் இஸ்ராயல் மக்களுக்கு தண்ணீர் வழங்கிய இடம்.
   1. சீனாய் மலை 2. ஒரேபு மலை
   3. மாரா 4. இரபீதம்

19. புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தாவாக அழைப்பைப் பெறக் காரணமான சில பிரதான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   a. அவர் ஒரு நீதிமான்
   b. அவரின் பரம்பரையில் அவரே குற்றமற்றவர்
   c.அவர் இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார்
   இவ் விடயங்களினால் குறிப்பிடப்படும் நபர்.
   1. ஆபிரகாம் 2. நோவா
   3. ஈசாக் 4. மோசே

20. பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு விடை தருக.

a. வரலாற்று அறிஞர்
b. மருத்துவர்
c. ஓவியக்கலைஞர்
d. தூய பவுலின் மறைதூதுப் பயணத்தில் கலந்து கொண்டவர். மேற் கூறிய விபரங்களுக்கு ஏற்ப உறுதிப்படுத்தப்படும் நபர்.
1. புனித யோவான் 2. புனித லூக்கா
3. புனித பேதுரு 4. புனித பர்னபா

21. பின்வரும் நூல்களில் இணைத்திருமுறை நூல்கள் மட்டும் உள்ளடங்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
A. தோபித்து B. ஆகாய்
C. யூகித்து D. செக்கரியா
1. A, B 2. A, C 3. A, D 4. B, D

22. தூய பேதுருவின் மொழி பெயர்பாளராக இருந்தவர்.
1. தூய மத்தேயு 2. தூய லூக்கா
3. தூய மாற்கு 4. தூய யோவான்

23. நெருப்பு பொறியினால் உதடுகள் தூய்மையாகப்பட்ட இறைவாக்கினர்.
1. எரேமியா 2. ஒசேயா 3. நாத்தான் 4. எசாயா

24. படைப்பு பற்றிய இரண்டாவது கதை எந்த மரபைச் சேர்ந்த ஆக்கமாகும்.
1. குரு மரபை 2. யாவே மரபை
3. எலோகிம் மரபை 4. இணைச்சட்ட மரபை

25. தூய மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட காலம்.
1. கி.பி 64 - 66 2. கி.பி 60 - 64
3. கி.பி 100 - 110 4. கி.பி 80 - 90

26. பவுலின் அறிவுரைப்படி அவரின் சீடரால் எழுதப்பட்ட திருமுகங்களில் ஒன்று.
1. 1 தீமோத்தேயு 2. எபேசியர்
3. உரோமையர் 4. தீத்து

27. திருவெளிப்பாட்டு இலக்கியத்தில் மரணத்தைக் குறிக்கும் நிறக் குறியீடு.
1. வெளிறிய நிறம் 2. சிவப்பு நிறம்
3. வெள்ளை நிறம் 4. கறுப்பு நிறம்

28. ஞானம் என்பதைக் குறிக்கும் எபிரேயச் சொல்.
1. ஹொக்மா 2. எமக்னா 3. வரீஹா 4. றேக்னா

29. யேசுவின் தோள் மீது சுமத்தப்பட்ட சிலுவையைச் சுமந்து கொண்டு செல்ல உதவியவர்.
1. சிரேனிய சீமோன் 2. சீமோன் பேதுரு
3. உரோமைய படைவீரர் 4. நிக்கதேமு

30. திருத்தூதர்களில் முதல் மறைசாட்சியானவர்.
1. பவுல் 2. பேதுரு
3. தூய யாக்கோபு 4. தூய ஸ்தேவான்

31. தூய பவுலுடன் 1வது தூதுரைப் பயணத்தில் இணைந்து கொண்டவர்கள்.
1. பர்னபா, சீலா 2. யோவான் மாற்கு, பர்னபா
3. சீலா, தீமேத்தேயு 4. தீமேத்தேயு, பர்னபா

32. “பிற இனத்தாரின் திருத்தூதர்” என அழைக்கப்பட்டவர்.
1. தூய பேதுரு 2. தூய பிலிப்பு
3. தூய பவுல் 4. தூய அந்திரேயா

33. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் ஒன்று.
1. தேவவேத புராணம் 2. தேவகாவியம்
3. மங்களகீதம் 4. வியாகுல பிரசங்கம்

34. மதுபானம் அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் தவறான செயல் எனப் பத்துக்கட்டளைகளில்......... எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
1. 5ம் கட்டளை 2. 7ம் கட்டளை
3. 8ம் கட்டளை 4. 10ம் கட்டளை

35. “பிள்ளைகளே உங்கள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியுங்கள் ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது” இவ் இறைவார்த்தை குறிப்பிடப்பட்டிருப்பது.
1. எபேசியருக்கு எழுதிய திருமுகம்
2. கொலோசேயர் திருமுகம்
3. சபை உரையாளர் நூல்
4. சீராக்கின் ஞானம் நூல்.

36. திருவழிபாட்டு ஆண்டில் பச்சை வர்ணம் பயன்படுத்தப்படுவது.
1. தவக்காலத்தில்
2. பொதுக்காலத்தில்
3. பாஸ்காகாலத்தில்
4. கிறிஸ்து பிறப்புக் காலத்தில்

37. தவக்காலம் ஆரம்பிப்பது.
1. குருத்தோலை ஞாயிறன்று
2. பெரிய வியாழனன்று
3. வீபூதிப் புதனன்று
4. பெரிய வெள்ளியன்று

38. பரூசியா என்பதன் பொருள்.
1. யேசுவின் 2ம் வருகை
2. மரியாலின் அமல உற்பவம்
3. யேசு மீட்பர்
4. பாவிகள்

39. புதிய ஏற்பாட்டின் உன்னத குரு.
1. மெல்கிசதெக் 2. செக்கரியா
3. யோவான் 4. யேசுக்கிறிஸ்து

40. எகிப்தியர் முகங்கொடுத்த எட்டாவது துன்பம்.
1. கல்மழை
2. தலைமகன் சாவு
3. வெட்டுக்கிளிகள் பரவுதல்
4. ஈக்களின் பெருக்கம்.

# இரண்டாம் வத்திக்கான் சங்கம்

## – ஓர் பார்வை



**“அவர்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருப்பதால், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களைக் கிறிஸ்துவின் பெயரால் வழிநடத்துகின்றனர்.**

### 6. திருச்சபையில் ஆயர்களின் அருட்பணி (விதித் தொகுப்பு)

**நன்றி. அருட்பணி. இ. கிளமெண்ட். ச.ச**

“திருச்சபையில் ஆயர்களின் அருட்பணி” என்னும் விதித்தொகுப்பு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை “ஆயர்களின் சங்கம்” என அழைக்கிறது. “திருச்சபை” மற்றும் “திருச்சபையில் ஆயர்களின் அருட்பணி.” ஆகிய இரண்டு ஏடுகளில் தலத்திருச்சபையின் தனிச்சிறப்பும் மறைமாவட்ட ஆயர்களின் மாண்பும் குறிப்பிடப்படுகின்றன. ஆயர்களின் அருட்பணியை வரையறுக்கத் தொடங்கிய இவ்வேடு, இறுதியில் திருச்சபையின் அமைப்பைச் சீர்திருத்தும் ஏடாக உருப்பெற்றுள்ளது.

திருச்சபையில் இடம்பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களும் அருளடையாளங்களிலிருந்து பிறப்பதால், ஆயர்கள் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டாலும் தம் ஆட்சியுரிமையை அவரிடமிருந்து பெறாமல், ஆயர் திருநிலைப்பாட்டிலிருந்து பெறுகின்றனர். மறைமாவட்டத்தை நிர்வகிக்கும் ஆயர்கள் திருத்தந்தையின் பிரதிநிதிகள் அல்லர். இருப்பினும் உரோமை ஆயரைத் தலைவராகக் கொண்டுள்ளனர். அவர்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருப்பதால், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களைக் கிறிஸ்துவின் பெயரால் வழிநடத்துகின்றனர். மறைமாவட்டங்களின் கூட்டமைப்பே திருச்சபை என இவ்வேடு விளக்குகிறது.

திருத்தூதர்களின் வழிவரும் மறைமாவட்ட ஆயர்கள் தமக்குள்ளும் தம் குழுவின் தனிப்பெரும் தலைவரான உரோமை ஆயருடனும் இணைந்து செயல்படுகின்றனர். ஆயர்கள் குழு திருச்சபையின் நலனில் அக்கறைக் கொண்டுள்ளது. ஆயர்கள் குழுவின் பெயரால் திருத்தந்தை திருச்சபையை வழிநடத்துகிறார். திருச்சபையில் அருள்வாழ்வு நலனுக்காக அதன் பொதுச்சட்டங்களிலிருந்து குறிப்பிட்ட சில செயல்பாடுகளுக்கு விலக்கீடு அளிக்கும் உரிமையை மறைமாவட்ட ஆயர்களுக்கு இக்குழு வழங்கியுள்ளதை இவ்வேடு நினைவூட்டுகிறது.

திருச்சபையின் பொதுநலன் கருதி திருத்தந்தைக்கே உரித்தான ஒரு சிலச் செயல்கள் நீங்கலாக, மற்ற எல்லாச் செயல்களும் மறைமாவட்ட அதிகாரத்திற்கு உட்பட்வை. ஆயர்கள் தம் அருட்பணியைத் தங்குத் தடையின்றி ஆற்ற, இத்தகு அதிகாரம் தேவை எனச் சங்கம் உணர்ந்து, திருச்சபையில் அதிகாரக் குவிப்பை அகற்றி, அதிகாரத்தைப் பரவலாக்கும் முறையைக் கடைப்பிடிக்கிறது. மறைமாவட்ட ஆயர்களுக்குத் தம் சொந்த மறைமாவட்டத்தின் நலனில் மட்டுமன்று, அனைத்துலகத் திருச்சபையின் நலனிலும் அக்கறையும் பொறுப்பும் உண்டு என விளக்குகிறது.

**தொடரும்**



ஆண்டவரே, வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது.

## 11 சேனைக்குரிய...

அருட்பணி. கிளேரியன் ஆகியோர் கடமையாற்றினார்கள். சேனை வளர்ந்து 13 வளர்ந்தோர் பிரசீடியங்களும் 3 பாலர் பிரசீடியங்களும் இயங்கி வந்தன. சேனை வளர்ந்து, இதழ் விரித்து தோப்பு, மனைச்சேனை, ஏத்துக்கால், குடாப்பாடு, கடற்கரை தெரு, முன்னக்கரை, போரத்தோட்டை ஆகிய பங்குகளில் பிரசீடிய கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 2022ஆம் ஆண்டு ஆன்ம குருவாக அருட்பணி. அசுந்த அடிகளார் தெரிவு செய்யப்பட்டதன் பிற்பாடு அவரின் ஊக்குவிப்பினால் பெரிய தெருவில் ஒரு வளர்ந்தோர் பிரசீடியமும் தோப்பில் 3 வளர்ந்தோர் பிரசீடியங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதன் பயனாக அற்புத மாதா கியூரியாவுக்கென்று 17 பிரசீடியங்கள் உருவாகின. எமது கொழும்பு கொமிசிய தலைவர் சேவியர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நீர்கொழும்பில் 2 கியூரியாக்கள் ஏற்படுத்த ஆன்ம குரு அசித்த அடிகளார் திட்டமிட்டார். அதன் பயனாக எமது சேனையாளர்களின் சேவைகளையும், நற்பண்புகளையும் கண்ட மக்கள் ஆர்வம் கொண்டு மரியாவின் சேனையில் சேர்ந்தார்கள். இதன் பயனாக தோப்பில் ஒரு புதிய கியூரியா உருவானது. அக் கியூரியாவின் பெயர் “அன்னம்மாளின் திருமகளாகிய மரியாள் கியூரியா” என்பதாகும். இப்புதிய கியூரியா தோப்பு பங்கை மையமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதில் தோப்பு, மணற்சேனை, போரதோட்டை ஆகிய பங்குகளில் இருந்து பிரசீடியங்கள் அமைக்கப்பட்டன. இப்புதிய கியூரியாவானது 2022, ஆவணி மாதம் 20ஆம் திகதி உதயமானது. இவ்வளவு பெரிய நிகழ்வை எம்முள் வளர்த்த பரிசுத்த ஆவியானவர்க்கும் சேனையின் நாயகியாம் மரியன்னைக்கும் நன்றி கூறுகின்றோம்.

**அன்னம்மாளின் திருமகளாகிய மரியா**
**கியூரியா தலைவர், செயவாளர்.**

## 14 குடும்ப செபமாலை...

குடும்பத்தவர், நியூயார்க் நகர கர்தினால் ஸ்பெல்மென் ஆகியோர் அந்த நிகழ்ச்சியில் பேசினர். அடுத்த நாள் நல்ல பாராட்டுகளும், விமர்சனங்களும் கிடைத்தன.

family rosary 1947இல் லண்டன் மறைமாவட்டம் செபமாலை இயக்கத்தைத் தொடங்கியது. பலதரப்பட்ட மக்கள் பங்கு பெற்றனர். தொடர்ந்து பல நாடுகளில், பல நகரங்களில் உலகம் முழுவதும் செயமாலை இயக்கம் பரவியது. பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் இலட்சக்கணக்கில் மக்கள் கூடி செபமாலை செபித்தது குறிப்பிடத்தக்கது. திரும்பத் திரும்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மும்பை, சென்னை, நியூயார்க் எனப் பல நகரங்களில் தொடர்ச்சியாக நடைபெற்றன. சூழ்நிலைக்-கேற்ப சமூக வலைத்தளங்களை ஆண்டவரே தோள் கொடுத்து வழிநடத்தினார் என தந்தை கூறுகிறார்.

இவரது செயல் பல திருத்தந்தையர்களால் போற்றப்பட்டன. 1987இல் இரண்டாம் சின்னப்பர் “செபமாலை மீண்டும் கத்தோலிக்கக் குடும்பத்தின் நிலையான செபம்” என்றார். “நீர் விசுவாசத்தின் மனிதன்” என இவரை திருத்தந்த இரண்டாம் சின்னப்பர் பாராட்டினார்.

## 05 சிறுமந்தையே!...

**பேரின்பம் காண இவ்வுலக வாழ்வில்**
**என்னென்ன செய்தாய்**

**ஒழுங்கான வாழ்க்கைப் பருவம் வாழ்க்கைக்கோலம்**
**திசைமாறி அலங்கோலமான உன் வாழ்வை**
**பிறர் வசை கூற வாழ்ந்து முடிக்கிறாய்**

### முடிவெடு

**அழகான இனிமையான மகிழ்வான**
**பள்ளிப்பருவம் உன்னை வளமாக்க இடங்கொடு**
**உன்னை செதுக்கி பக்குவப்படுத்த நேரங்கொடு**
**பருவம் தாண்டி பயிர்செய்ய முயலாதே**
**உன் உடலை சிறைப்படுத்தி ஆன்மாவை கறைப்படுத்தும்**
**அழிவுக்கு இட்டுச் செல்லும் அகலமான பாதையை விட்டு**
**இடுக்கமான வாழ்வுக்கு இட்டுச் செல்லும்**
**பாதையில் பயணிக்க அழைத்திடும் ஆண்டவனின்**
**குரலுக்கு செவிகொடு**
**உன் கரம்பிடித்து அழைத்துச் செல்ல**
**வாஞ்சையுடன் காத்திருக்கும்**
**உன் படைப்பாளர் வாழ்வின் உரிமையாளர்**
**உன் கதையை அழகான கவிதை வரியாக்கி**
**விண்ணக வாழ்வில் பிரகாசித்த அவரின்**
**அரவணைப்புக்குள் தஞ்சம் புகு**
**உன் வாழ்வு வசந்தமாகும்**
**உன் இளமை புனிதமாகும்**
**உன் செயல்கள் அருளாகும்**
**முடிவில்லா பேரின்ப வாழ்வுக்கு**
**இவ்வுலக வாழ்வு முதலாகும்.**

**செல்வி. த. மேரி பற்றீசியா**

---

1992 ஆம் ஆண்டு அருள்தந்தை பேட்ரிக் பெய்டன் இறைவனடி சேர்ந்தார். உலகம் முழுவதும் (அக்காலத்தில் கடுமையாக ஆட்சி புரிந்த கம்யூனிஸ்ட் நாடுகள் உள்பட) செபமாலை சொல்லிச் செபிக்கத் தொடங்கின. அருள்தந்தைக்கு புனிதர் பட்டம் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர் புனிதராக உயர்த்தப்பட செபிப்போம்.

செபமாலை செபிக்கும்போது மறையுண்மையைக் கூறி செபிக்கிறோம். தொடர்ந்து மன்றாடுகிறோம். மகிமை தேவ இரகசியங்களில் அன்னை மரியா விண்ணுலகிற்கும், மண்ணுலகிற்கும் அரசி என்பதைக் கூறி செபிக்கிறோம்.

Queen என்றும், அரசி என்றும் ஆகஸ்டு 22ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இதை திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் பிரகடனம் செய்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்து ஐரோப்பா கண்டம் முழுவதும் கஷ்டமான நிலையில் இருந்தது. ஊனமுற்றோர், விதவைகள், வீடிழந்தோர் மற்றும் குடிதண்ணீர் பஞ்சம் என்று சிரமமான நிலை. உணவு கிடைப்பதிலும் கஷ்டம். இந்தக் காலத்தில்தான் இப்பிரகடனம் வந்தது. அப்போது அருள்தந்தை பேட்ரிக் பெய்டனும் வாழ்ந்த காலம்.

# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி.....

13

கடந்த பகுதியில் 10 பெருந்துன்பங்களை பற்றி பார்த்தோம், எல்லா இடர்களையும் கடந்து மோசே இஸ்ராயேலரை எகிப்தினின்று அழைத்துச் செள்றதையும் அதன் பின்னர் நடந்தவற்றையும் இனிவரும் தொடர்களில் காண்போம்.



சிறுவர்களே! உங்களுக்காக

ஆக்கம் : இவஞ்சலிஸ்டா வினோலிசன்

# மோசே




ஆட்டின் இரத்தத்தை தம் கதவு மேல்சட்டத்தில் பூசியிருந்த இஸ்ராயேல் வீடுகளை கடந்து செல்லல்.



மோசே இரபிதிம் எனும் இடத்தில் தனது கோலால் பாறையை அடிக்க அதிலிருந்து நீர் புறப்பட்டது.



இஸ்ராயேலர் செங்கடலை கடந்து செல்லல்


இரபிதிமில் அமலேக்கியர் இஸ்ராயேலரோடு போர் புரிந்த வேளை மோசே குன்றின் உச்சியிலிருந்து தம் கையை உயர்த்திய போது இஸ்ராயேலர் வெற்றியீட்டினர்





இஸ்ராயேலருக்கு பாலைநிலத்தில் ஆண்டவர் வானின்று மன்னா பொழிந்தமை,யும் காடைகளை உணவாக அளித்தமையும்





இவ்வாறு தடைகளை தாண்டி பயணித்து சீனாய் மலையை அடைந்தனர். அங்கே ஆண்டவர் மோசேக்கு 10 கட்டளைகள் கொண்ட கற்பலகையை வழங்கினார்.

தொடரும்.

கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.




பழைய ஏற்பாட்டில், தேவாலய குருக்களின் ஆதரவுக்காகவும், வேதத்தைப் பேணுவதற்காகவும் கடவுள் ஏற்படுத்திய ஒரு விஷேச சட்டம் இருந்தது. புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவர் தம் ஊழியர்கள் யாருக்காக உழைக்கிறார்களோ, அவர்களால் ஆதரிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். “கோவில் பணிவிடைக்காரர் கோவிலுக்குரியவைகளில் புசிக்கிறார்கள் என்றும், பீடத்தின் பரிசாரகர்கள் பீடத்துக்கு உரியவைகளில் பங்கடைகிறார்கள் என்றும் அறியீர்களோ? அவ்வாறே, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களும் சுவிசேஷத்தினாலே பிழைக்கும்படி ஆண்டவர் ஏற்பாடு செய்திருக்கிறார்” என்று புனித. சின்னப்பர் கூறுகிறார் (1கொரி 9:13,14) எனவே, தேவ கட்டளைப் படி, தங்களால் இயன்ற அளவில் விசுவாசிகள் தங்கள் மேய்ப்பர்களுக்குத் தேவையானவைகளைத் தர கடமைப்பட்டிக்கிறார்கள்.

இக்கடமையை நிறைவேற்றுவதற்கான முறை அந்தந்தக் காலத்திற்கேற்ப மாறி வந்திருக்கிறது. ஆதித் திருச்சபையில் இருந்தது போலவே, இன்றைய நாட்களிலும் மக்களின் காணிக்கை தான் ஏறத்தாழ திருச்சபையின் ஒரே நிதி ஆதாரமாக இருக்கின்றது. மேலும் குருக்கள் கடவுளுக்கு உரியவையும், ஆத்துமங்களின் பராமரிப்புக்கு உரியவையுமான காரியங்களுக்காக அபிஷேகம் செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் தங்கள் பிழைப்புக்காக உலகத் தன்மையான வேலைகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, திருச்சபை தனது ஆறாம் கட்டளையில், தனது தெய்வீக ஸ்தாபகரால் விசுவாசிகள் மேல் சுமத்தப்பட்ட கடமையை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறது.

நீதியின்படி, குருநிலையினர் தங்கள் மக்களால் ஆதரிக்கப்பட உரிமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் சட்டபூர்வமான அதிகாரத்தால் ஒரு பங்கின் ஆன்ம நலன்களுக்குப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிற குருக்கள் விசுவாசிகளின் எல்லாத் தேவைகளிலும் அவர்களுக்கு உதவுகிறார்கள்.

திருச்சபையின் இக்கட்டளை மிகக் கண்டிப்பான ஒன்று. ஆனாலும் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இந்தக் கட்டளையை அனுசரிக்கத் தவறுவதால் சாவான பாவம் கட்டிக்கொள்ளப்படுகிறதா என்பதைத் தீர்மானிப்பது கடினம். அத்தகைய சூழலில் ஒரு பங்கு குருவானவர் எந்த அளவு தேவையில் இருக்கிறார். அவருக்கு உதவி செய்யத் தவறுகிற பங்கு விசுவாசியின் நிதி நிலைமை என்ன ஆகியவற்றை அது பெருமளவுக்கு சார்ந்திருக்கிறது. ஆயினும் பல வருடங்களாக தங்கள் வேத கடமைகளை அசட்டை

நன்றி. வில்லியம் ஜே. ரேமர்ஸ். C.S.S.R

செய்து வரும் அக்கறையற்ற கத்தோலிக்கர்கள் தங்கள் அயலாருக்குத் துர்மாதிரிகையாக இருப்பது மட்டுமன்றி, அவர்கள் திருச்சபையின் ஆறாம் கட்டளைக்கு எதிராக, கடமையில் தவறுவதாகிய ஒரு சாவான பாவத்தையும் கட்டிக்கொள்கிறார்கள்.

திருச்சபையின் மேய்ப்பவர்கள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். தேவாலயங்களும், பள்ளிகளும் கட்டப்பட வேண்டும். தேவ வழிபாட்டோடு தொடர்புள்ள அனைத்தும் தகுதியுள்ள முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது மட்டும் இந்தத் திருச்சபைக் கட்டளையின் நோக்கமல்ல, மாறாக, இந்தப் பூலோகத்தில் கிறிஸ்து அரசரின் இராச்சியம் ஆத்துமங்களின் இரட்சிப்பிற்காக எங்கும் பரவ வேண்டும் என்பது அதன் முக்கியமான நோக்கமாக இருக்கிறது. குருநிலையினரையும், விசுவாசிகளையும், பிறர்சிநேகத்தின் கட்டுக்களால் ஒன்றிப்பதும் இந்தக் கட்டளையின் நோக்கமாக இருக்கிறது. ஏனென்றால் இந்தப் பரஸ்பர நேரம் பலமுள்ளதாக இருக்கும் இடங்களில் எல்லாம் கத்தோலிக்க விசுவாசம் செழித்து

ஆண்டவரே, எங்கள் பாவங்களை மன்னித்தருளும்.

வளர்ந்து பரவுகிறது. குருக்கள் தங்கள் பங்கு மக்களின் ஆதரவுக்குப் பிரதிபலனாக, அவர்களுக்குப் போதுமானதைத் திருப்பிச் செலுத்துவதில்லையா? ஏனெனில் அவர்கள் தங்கள் பங்கு மக்களின் ஆன்ம தேவைகள் அனைத்திலும் அவர்களுக்கு உதவும்படி தங்கள் வாழ்வையே அர்ப்பணித்திருக்கிறார்கள் அல்லவா? விசுவாசிகள் திருச்சபைக்குச் செய்யும் சகல உலக ரீதியான உபகாரங்களும், அவற்றைப் பெற்றுக் கொள்வோராகிய ஞான மேய்ப்பவர்களுக்கு மட்டுமல்லாமல், அவற்றைத் தருபவர்களாகிய விசுவாசிகளுக்கும் நன்மை பயப்பவையாக இருக்கின்றன. ஏனென்றால் திருச்சபையும், அது கொண்டுள்ள சகலமும், மக்களின் நன்மைக்காகவே உலகில் நிலைத்திருக்கின்றன.

**முற்றும்**

## 07 பொருளுள்ள ஞாயிறு...

அதாவது, பங்கேற்க இயலாத மற்றக் கோவில்களின் சார்பாகப் "பீடப் பணியாளர்கள்" அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் தூய்மையான வெள்ளைத் துணி ஒன்றுடன் வந்து, திருத்தந்தையின் திருப்பலியில் பங்குபெற்றனர். திருத்தந்தை வசீகரம் செய்த அப்பத்தைப் பிட்டதும், அதில் சில சிறு துண்டுகளை வெள்ளைத் துணியில் பெற்றுக் கொண்டனர். அதன் பிறகு, அவர்கள் உடனே அதை எடுத்துக் கொண்டு தங்களுடைய சிற்றாலயங்களுக்குப் பக்தியுடன் சென்றனர். அங்கு கொண்டாடப்படும் திருப்பலியில் இரசம் வசீகரம் செய்யப்பட்டதும். இந்த சிறு அப்பத் துண்டுகள் அந்த இரசத்தோடு கலக்கப்பட்டன. இது உரோமை ஆயருடன் பிற ஆயர்களுக்கும் குருக்களுக்கும் இறைமக்களுக்கும் உள்ள ஒன்றிப்பை மற்றும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் மிகச் சிறப்பான ஒரு சடங்காகத் திகழ்ந்தது.

இந்த "ஒன்றிப்பின் அடையாளமாகவே" இன்றும் கூட திருப்பலியில் வசீகரம் செய்யப்பட்ட இரசத்தோடு உடைக்கப்பட்ட திரு அப்பத்தின் ஒரு பகுதி கலக்கப்படுகிறது. பழங்காலச் சடங்கை நினைவுகூரும் இந்தச் சடங்கு "ஒன்றாகக் கலத்தல்" என்று அழைக்கப்படுகின்றது.

**முடிவாக**

இவ்வாறு நாம் ஏற்கனவே மேலே கூறியதுபோல, 8ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு மற்ற வழிபாட்டு முறைகள் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தன. இலத்தீன் வழிபாட்டு முறையின் ஆதிக்கமே மேலோங்கியது.

இந்நிலையே ஏறக்குறைய இரண்டாம் வத்திக்கான் சங்கம் வரை நீடித்தது. ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்கமோ இந்நிலையை மாற்றி, பழங்காலத் திருப்பலிகளில் இருந்து அழிந்துபோன நல்லவற்றை மீண்டும் திருப்பலியோடு சேர்த்தது. அது மட்டுமன்றி இக்காலத்தின் தேவைக்கேற்ப மக்கள் நன்முறையில் பங்கேற்கும் வண்ணம் திருவழிபாட்டுச் சீரமைப்பை ஊக்கப்படுத்துகின்றது. இதன் விளைவாகவே 1970க்கு பிறகு நாம் தமிழில் திருப்பலி கொண்டாடவும் பங்கேற்கவும் நமக்கு வாய்ப்புக் கிட்டியது.

## 04 இயேசுவுடன்...

கழித்து அறிஞர்களுடனும், மூப்பர்களுடன் அவர் உறையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள் பத்து மாதம் கருவறையில் சுமந்த மகன், இறுதியில் மூன்று நாட்கள் கல்லறையில் இருந்தாரே அதற்கு முன் உதாரணமாக இந்த மூன்று நாட்கள் இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கானாவூர் கல்யாண வீட்டில் இரசம் தீர்ந்து விட்டதென்று அறிந்து கொண்ட அன்னை மரியாள், கல்யாண வீட்டுக்காரர், வந்திருந்த விருந்தினர்கள் முன் கேவலப்பட்டுவிட கூடாதென்ற நன்நோக்கில், இயேசுவைக் கூப்பிட்டு இப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கக் கூறுகிறாள். அந்த இடத்தில் மகனின் வல்லமை வெளிப்பட வேண்டுமென்பது அவளது மற்றொரு ஆசை. தனது பரிந்துரைக்கு மகன் கீழ்படிவான் என்று தெரிந்திருந்த அன்னை, அவரது மறுமொழிக்குக் காத்திராமல் "அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள்" என்று அங்கிருந்தவர்களுக்குப் பணித்தார். நினைத்த காரியமும் நிறைவேறியது. அதே போன்றுதான் அன்னை மரியாள் எங்களுக்கும் சொல்லுகிறாள். எனது பரிந்துரை நிறைவேற அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள். அவர் சொல்லுவதெல்லாம் பிறர் அன்பு, பிறர் சிநேகம். அவர் உரைப்பதெல்லாம் "உன்னை நேசிப்பது போல் பிறரையும் நேசி" என்பதுத்தான்.

"எனது நேரம் இன்னமும் வரவில்லை". "எனது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே வந்தேன்" என்றெல்லாம் கூறி அவர் அன்னையை ஒதுக்கிய போதும், அவள் அவரை விடவில்லை. அவள் அவரோடேயே தொடர்ந்து பயணித்தாள். கல்வாரி மலையில் சிலுவை சுமந்து சென்ற போதும் அவருடனேயே இருந்தாள். தாயை பராமாரிக்க வேண்டிய நான், அவளை பரிதவிக்க விட்டுவிட்டு போகின்றேனே என்ற ஆதங்கத்தில் "இதோ உன் தாய்" என்று சீடர்களிடம் அன்னையை ஒப்புவித்துவிட்டு உயிர்த் துறக்கின்றார். மகனின் இறந்த உடலை மடியில் வளர்த்தி, தனது வியாகுலங்களை வெளிப்படுத்தினாள். அன்னை கருவேந்திய நாள் முதல் கல்லறைக்கு சென்ற நாள் வரை இயேசுவுடனேயே பயணித்த அன்னை தனது கடமையை இறுதி வரை செய்து முடித்தாள்.

மரியாளுக்கு வணக்கம் செலுத்துவோம் அவள் பரிந்துரையால் எங்களுக்குத் தேவையான அனைத்தையும் இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுவோம்.

### திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி

**இறைவனின் அன்னையாம் மரியாவை பிள்ளைக்குரிய நம்பிக்கையோடு நோக்கி, நாம் வாழ்வில் முன்னேறிச் செல்ல அவரது பரிந்துரையை வேண்டுவோம்**



நெருக்கடி வேளையில் எனக்கு அரணும் அடைக்கலமும் நீரே.


Studio Vino Clicks
Wedding
Puberty
Birthday
Baptism
Engagement
Anniversary
First Holy Communion
Other Events
Story Book Albums, Magazine Book Albums, Digital Albums
HD Video, Video Audio Editings, Photo Framing.
STUDIO VINO CLICKS
Vinolison Fernando +94 773 725 735
70/28,2/1,Singhapura Flats, Baseline Road.Borella,Colobmbo-08.
+94 760842608
+94 112676081
+94 773 725735
studiovinoclicks@gmail.com / vino0205@gmail.com
Studio Vino Clicks / Vinolison Fernando
Click Your Memories




"மறை வளர ஒன்றிணைவோம்"
இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 25.10.2022 அன்று வெளியிடப்பட்டது.
Published by: Rev. Fr. Ananda Fernandopulle. www.colombostjosephvazmandram.lk